



# உள்ளங்கள் மெல்லப் பேசுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வர்ணகுலசிங்கம் முருகதாசன்

## தமிழர் நெஞ்சில் நிலைத்த தமிழா

தமிழுக்காய் உனைத் தீய்க்குள்தந்து
தமிழ்க் கடவுளும் ஆனாய் தமிழர் நினைவிலும் ஆனாய்
முருகதாசா தமிழர் இனிய தாஸா
மனுநீதித் தலமான ஜெனிவாவில் உனைக்கருக்கி
இனவெறி எரியும் ஈழத்தில் தமிழர் வதையும் தாக்கத்தை
விரியும் சிங்களச் ஸ்ரீலங்காவின் வெறித்தனத்தை - உலகு
புரியும்படி செய்த முருகா
ஈழத்தில் மற வழியில், இங்கு அறவழியில்
தீயாகத்தீக்கு உயிர்க் கொடை தந்த செம்மலே
மலரும் ஈழத்தில் நிலையாவாய் - தமிழர் நெஞ்சில்
தியாக மலையாவாய்
அஞ்சலிகள் அஞ்சலிகள் அஞ்சலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அன்பே சிவம் !

# தாயின் உணர்வலைகள்!!

ஐயகோ!!
என்ன கொடுமை எனக்கிங்கு நேர்ந்தது?
என் பிள்ளை எனக்கில்லை!
என்சொல்லி நான் அழுவேன்?
யாரை இனி நான் தொழுவேன்?

ஏனடி பத்திரகாளி! எங்கையடி என்பிள்ளை?
என் முன்னே நில்லடி!
பதில் சொல்லி விட்டுச் செல்லடி!!
ஏனடி சிரிக்கிறாய்? பதில் சொல்ல மறுக்கிறாய்?!

முற்றத்து வைரவன் முடவனாய்ப் போனானோ?
கண் முன்னே காளியவள் காணாமல் போனாளோ?
புளியங்காண் பிள்ளையாண் பொய்யாகிப் போனானோ?
வெள்ளித்தியானும் விழங்காமல் போனானோ?
வல்லிபுர மாயவன் வலுவிழந்து போனானோ?
குல தெய்வம் எல்லாம் குலக்கொடி காக்க மறந்தோ?!

அம்மா உமையம்மா! இது என்ன வினையம்மா?
உன் மகன் மாம்பழம் வேண்டி - அன்று
மலையேறிச்சென்றுவிட - ஔவையைத் தூதனுப்பி
உடன் அழைத்து வந்துவிட்டாய்.

என்னினம் மீதங்கு எரிகுண்டு வீழுது!
பச்சைப்பசும் பிள்ளை பாலின்றி அழுகுது!
வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி கட்டிய வீடு
கண்முன்னே அழியுது.
என்மகன் முருகன் இக்கொடுமை நிறுத்தென்று
வான்மீது ஏறி பரலோகம் சென்று விட
அழைத்து வர யாரை நான் தூதனுப்ப?
எங்கு சென்று நீதி கேட்க?!

உன் பிறப்புடன் மாமனவன் மடிந்துவிட
அவன்தான் நீ என்று சுற்றத்தார் சொல்லி நிற்க
நானும் அதை மெல்ல நம்பி நிற்க
அவன் போல் நீயும் பாதி வழி சென்றுவிட
எங்கு சென்று என் சோகம் சேர்ப்பேன்?
எந்த ஆற்றில் என் பாவம் தீர்ப்பேன்?!

அப்பன் வெளியூர்ப் பயணம்!
அங்கே அவன் சிறைவாசம்!
நாமிங்கே வனவாசம்!
பள்ளி செல்லும் வயதுனக்கு!
தம்பியும் தங்கையும் அப்படித்தான்!

உன் உச்சந்தலை எண்ணை இட்டு
காற்சட்டையுடன் சேட்டும் இட்டு
அறுந்து விழுந்த பொத்தான் தைத்து
களன்ற செருப்பின் காது கொழுவி
உடைந்த பென்சில்க் கூர் தீட்டி
மூக்குப் பிடித்து மூஞ்சை கழுவி
துள்ளித்திரிந்த உன் துடுப்படக்கி
குளிக்க மறுப்பினும் - உனை பள்ளி
அனுப்பிய நாள் நான் மறப்பனோ?!

உழுத்தம்மா தோசையில்லை!
குத்தரிசிச் சோறுமில்லை!
கோழிக்கறி சமைத்ததில்லை! - ஏன்
முட்டை நிறமே நாம் அறிந்ததில்லை!
வறுமை எமை வாட்டிய போதும்
வாடா உன் முகம் நான் மறப்பனோ?!

அல்லல் பல கண்டு ஆண்டவன் துணை கொண்டு
வெளிநாடு வந்து விட்டோம்!
அடுத்த தெரு நானறியேன்! பக்கத்தூர்ப் பேரறியேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையன் பேச்சறியேன்! - வேறென்ன
வெளிநாட்டின் பேரே நானறியேன்.

நீ அறியா ஊரும் இல்லை
சுற்றாத நாடுமில்லை
உலகம் சுற்றும் வாலிபன் - என்று
உள்ளத்தே பெருமை கொண்டேன்!
உன்பேச்சை காது கொடுத்து நான் கேட்டேன்!
பொங்கிடும் அழகு கண்டு - என் மகனா இவன் என்று
பலமுறை நான் வியந்தேன்.
உயிர்போகும் வரை இத்தனையும் நான் மறப்பனோ?!
முத்துக்குமரன் தாய் அழுதல் கண்டு
தாங்கவே மாட்டாய் நீ பின்னாலே போவென்று
எனை அன்று தடுத்தாயே!
வன்னி நிலமை - அழுவாய்
நீ என்று சொல்ல மறுத்தாயே!
உனைப்பிரிந்து தவிப்பேன் நானென்று
நன்கு நீ அறிவாயே!

என் கண்ணீர் காட்டிலும் - எம்மக்கள்
செந்நீர் தடுக்க உன்னுயிர் கொடுத்தாயே!
என் மகன் நீ என பெருமையாய் இருக்குதடா!
உள் மனம் கொஞ்சம் ஆறுதல் கொள்ளுதடா!

தன்னுயிர் போகுமென்று தெரிந்தும்
தாயவள் கேட்டதால் வரம் கொடுத்தான் கர்ணன்!
நாட்டுக்காய் தன்னுயிர் ஈந்தவனே!
எனை விட்டுப் போகிலும் - நித்தம்
என் கனவில் வந்து விட்டுப் போகும்
வரம் ஒன்று கேட்கிறேன்
தந்து விட்டுப் போடா!!

# தந்தையின் உள்ளக்குமுறல்!!

உத்தமன் உனக்கு ஊதுபத்தி குற்றி வைக்க,
தீப்பற்றி எரியும் என்று உன்தம்பி ஊதி நிற்க,
ஆங்கே ஒரு பொறி உள்ளங்கை வீழ்ந்துவிட,
துடித்ததைத் தட்டிவிட்டு கடைக்கண்ணில் நீர் கொண்டு,
தொப்பளம் போட்டதென்று தொண்ணூறு முறை தொட்டு,
பக்குவம் பல செய்து பலனேதும் இல்லையென்று,
வைத்தியம் செய்தும் ஏன் வலியாறவில்லையென்று,
வைத்தியனை நொந்துவிட்டு,
நித்தம் அதை நினைக்கிறேன்.

ஆறு லட்சம் நரம்பிலும் தீ நாக்கு தீண்டி நிற்க்க,
எப்படிடா துடித்திருப்பாய்? ஏனடா இப்படியோர் முடிவெடுத்தாய்?
ஆணழகா! உன்னுயிர் அத்தனை சீக்கிரம் போயிருக்காது!
வேதனை கொண்டு வெகுதூரம் ஓடினாயாமே?!
உயிர் உள்ளபோதே உன்னுடல் கருகிட்டாமே?!
பார்வையிழந்து சுவர் ஒன்றில் முட்டினாயாமே?!
பலகை ஒன்று உன் உடல்த் தீயால் எரிந்திட்டாமே?!
தீப்பேய் உனை ஓரிடத்தில் மடக்கிவிட்டு,
மெல்ல மெல்ல ரசித்து ருசித்து உன்னுயிர் குடித்திட்டாமோ?!!
பார்க்காதார் பலர் பலவிதமாய்ப் பேசுகின்றார்!
சொல்லியே அதை, எம் நெஞ்சினில் குற்றுகின்றார்!
உண்மையும் அதுதான் போலும்! உள்ளம் சொல்கிறது!!
ஊமையாய் அழுகிறது! மெல்லக் காதுவழி கேட்கிறது.

உன்வேதனை எண்ணி கண்ணீர் குடம் குடமாய்க் கொட்டுதடா!
வேதனைகொண்ட உனக்கேன் குளமாய் கொட்டவில்லை?!
உன் உடல் எங்கும் வழிந்தோடி
நீ கொண்ட தீயை ஏன் அணைக்கவில்லை?!
அப்போ, நீ அழவில்லையா?!
அழவில்லையெனில் நீ மனிதனில்லை!
ஆம், நீ மனிதனில்லை! புனிதன்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இங்கே தங்கிவிட்டுச் செல்ல வந்தவர்கள்!
உங்கள் உலகம் வேறு! எங்கள் உலகம் வேறு!
உங்களை எம்மால் புரிந்து கொள்ள முடியாது!
உங்கள் செயற்பாடுகளையும்தான்!!
அதற்காக ஆதரவு எதிர்ப்பு விமர்சனம்,
எதுவுமே நாம் செய்ய முடியாது.
நீங்கள் செய்ய வந்ததை செய்து விட்டுச்செல்கிறீர்கள்!
நாங்கள் அதை அர்த்தப்பட வைப்போம் அவ்வளவுதான்.
ஆனால் ஒன்று மன்றாடிக்கேட்கிறேன்,
பாவிகள் உலகிற்கு இனி நீங்கள் வரவேண்டாம்.
எம்மால் உமைப்பிரிந்து வாழ முடியாது.
அங்கிருந்தே ஏதாவது செய்யுங்கள்!

இந்த இருட்டும், பகையின் பேய் வெருட்டும்,
நாளை விடியும் வரை மட்டுமே!!!
உங்கள் தியாகங்கள் நாளை விடியல் கொண்டு வரும்!!
வெள்ளைப் பூக்கள் அங்கே மலர்ந்தாடும்!
குருவிகள் ஒன்றாய்க் கூடுசேரும்!
வயல் வெளிகள் பசுமை பெறும்!
கார்மேகம் சூழ்ந்து நிற்கும்!
மயில்கள் தோகை விரிக்கும்!
மீனினம் மெல்லப் பாட்டிசைக்கும்!
எம் நாட்டிலும் குயில்கள் கூவும்!

அன்று நீங்கள் வாருங்கள்!
வாழ்வாங்கு வாழுங்கள்!!
பாவிகள் நாம் விலகிச்செல்கிறோம்.

**ஓம் முருகா! ஓம் முருகா!! ஓம் முருகா!!!**

# மண்ணுக்காய் இன்னுயிர் தந்தவனே!

ஈழத்தின் கரவெட்டியில் இருபத்தேழு ஆண்டுகள்முன் இன்னுயிராய் வந்துதித்தான் ஈழமகன் முருகதாசனவன்.

பத்து மாதங்கள் பக்குவமாய்ப் பாதுகாத்துப் பெற்றுன்னைப் பட்டங்கள் பெறவைத்துப் பார்புகழ வைத்தார் உன் பெற்றோர்.

வன்னியிலே வஞ்சகரின் வதைகளிலே சிக்கி வாழ்விழந்து எம்மினம் மடியும் நிலைகண்டு வாடிய உன் மனது கோபம் கொண்டதனால் கொடியவர் கொட்டம் அடக்கிட வேண்டுமென ஐநா முற்றலிலே உடல் எரித்து உயிர் நீக்கி உறங்கச் சென்றுவிட்டீர்.

உயிருக்காய், உடலுக்காய், உணவுக்காய் உறவுக்காய் உயிர்காக்கவென உழைப்போர் மத்தியிலே,
உன் தாயைத், தந்தையை, ஓடிவிளையாடிய தங்கையை, தம்பியை நீ மறந்து, தினம் தினம் துடிக்கும் எம் இனத்திற்காய்த் தீயினிலே குளித்ததை எம் அகக்கண்ணால் கண்டு துடிக்கின்றோம் ஐயா

உன்னைப்போல் உத்தமத் தியாகியின் இழப்பு உன்னவர்க்கு மட்டுமல்ல எங்களுக்கும் பேரிழப்பு உனக்காக வாழாது உன்னதக் கொள்கைக்காய் உயிர்க்கொடை தந்தவனே. உலகில் தமிழினம் உள்ளமட்டும் உன்நாமம் மறவோம்.

மகளிர் அமைப்பு
பிரித்தானியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Freeman Dr. N. S. Moorthy
White Pigeon
175, Tooting High Street,
London SW17 0SZ

தியாகச் செம்மல் முருகதாசனுக்கு எமது கண்ணீர் அஞ்சலி தாயத்தில் எம்மக்கள் படும் அவலங்களைக் கண்டு ஆறாயிரம் மைல்களுக்கப்பால் வாழும் எம் மன வேதனையை ஐரோப்பிய சமூகத்துக்கும் ஐ.நா. மன்றத்துக்கும் உறைக்கும் வண்ணம் தனது அளப்பரிய அதி உன்னத உயிர்த் தியாகத்தால் உலகறியச் செய்த உன்னத இளந்தமிழன் முருகதாசனுக்கு எமது சிரம்தாழ்ந்த வணக்கங்கள்.

அவரை இந்த தமிழுலகுக்கு ஈந்த அவருடைய பெற்றோருக்கும், குடும்பத்தாருக்கும் எமது நெஞ்சம் நெகிழும் அனுதாபங்கள். ஒரு வீரத் தமிழ் மகனை ஈன்ற அவர்கள் பெருமைக் குரியவர்களே!

தியாகி முருகதாசனின் இந்த அளப்பரிய ஈகம் அகிலம் உள்ளவரை, தமிழினம் உள்ளவரை நினைவில் நிறுத்தப்படும்.

நெகிழும் நெஞ்சுடன்
என். எஸ். மூர்த்தி



Cllr Thaya Idaikkadar

## LONDON BOROUGH OF HARROW

P.O. Box 2, Civic Centre, Harrow, Middlesex, HA1 2UH
**Tel:** 020 8424 1337 **Fax:** 020 8424 1237 **DX:** 30450 Harrow 3

Home: 13 Cambridge Road, North Harrow, Middlesex, HA2 7LA
**Tel:** 020 8427 8850 **Mob:** 07751 450 761, **Fax:** 020 8427 6041
**E-mail:** Thaya10@Aol.com

Members


03 March 2009.

Mr Murugathas made the ultimate sacrifice any one could do for his community. All Tamil Councillors salute his braveness and courage for what he did.

We must all reflect on the reasons why he did the ultimate sacrifice and what he hoped to achieve by his actions. The best honour we can show on him is to help Tamils to achieve self determinations and human rights and all other rights, we in the West Enjoy.

His parents and family are in our thoughts and we offer our deepest sympathies to the family. Mr Murugathas is not only a son to the family but a son to all Tamils.

**Cllr Thaya Idaikkadar**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Agonising cry in the wilderness from our Tamil community! Is Self immolation a final call to open the eyes & ears of the International community?

The British Tamil Forum would wish to issue this statement on behalf of its membership to the British Public. We the Tamil expatriates from all walks of life living in United Kingdom express our heartfelt condolence to Mr. Murugathasan Varnakulasingham's family. We were very concerned and in deep sorrow in the manner he had immolated himself to highlight the pathetic plight of Tamil community in Srilanka today. We can understand his desperation and despair to take such an action. How can we blame him for his action? He and his family had been victims, like many of us for the past three decades. He was quite able to relate the present sufferings of our people with his own experience, and was despondent that no International community took any positive action. There have been too many Tamil youths, now seven of them who have immolated themselves in the past few months ranging from South India, Malaysia and in Britain. All these young men want the International community to respond to the vicious inhumane treatment of Tamils by Srilankan State. However, there seems to be; too little response from International community. Mere lip service does not suffice our desperate call for help.

Murugathasan joined thousands of participants in the protest march in Geneva. A little after eight o'clock last Thursday night, the computing graduate from UK doused himself in petrol in Geneva and set light to his body outside the United Nations complex in the Place des Nations. Murugathasan, who stood "burning like a touch" in the United Nations complex, was to remind the UN that his body torch is for them to guide the Tamils through their liberation path. The letters he left few meters away in English and Tamil explains why he chose to take his life. "We Tamils displaced all over the world have loudly raised our problems and asked redress from the International community in the past three decades. As you maintained silence, it had helped the Srilankan State to continue with their genocidal agenda. Therefore, I have decided to sacrifice my life... hope the flames over my body will be a torch to guide you through the liberation path". We humbly prey to almighty for your soul to rest in peace. We pay our homage for your brave sacrifice of your life, which you have dedicated to the suffering of our people. Thank You.

The British Tamil Forum kindly makes this appeals to our community youths, please refrain from self- immolation in the future. We call upon all Tamils to stand united to achieve our goal. We will fight tooth and nail to maintain our homeland, and help us to live with justice and dignity.

Raj.

# தியாகத் திருமகன் முருகதாசன்

ஜெனீவா நகரில் ஐ.நா சபையின் முன்றலில் தமிழ் இளைஞன் முருகதாசன் 12.02.09 அன்று ஈழத்தமிழ் மக்களின் அநியாய அழிப்பு கண்டு நீதி கேட்டு தீக்குளித்து தன் உயிரை தியாகம் செய்துள்ளார். முருகதாசனின் தியாகத்தை மதிக்கும் அதே நேரம் அவர் தனது உயிரை மாய்த்த விதம் வேதனையை தருவதாக உள்ளது அவரது குடும்பத்தினரின் உணர்வுகளை நாமும் பகிர்ந்து கொள்கிறோம்.

உலகத்தவர் நீதி கேட்கும் இடம் ஜெனீவா. ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் 60 வருடங்களாக நீதிக்காக போராடி வருகிறார்கள். ஜெனீவாவிலும் பல முறை முறையீடு செய்துள்ளார்கள். ஆனால் அவர்களது முறையீட்டுக்கு தகுந்த பதில் இற்றைவரை கிடைக்கவில்லை.

ஸ்ரீலங்கா அரசின் தொடர்ச்சியான இன அழிப்பை பொறுக்கமுடியாது உலகத்தமிழ் இனம் என்றும் இல்லாத அளவு திரண்டெழுந்துள்ளது. ஈழத்தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் படுகொலைகளை நிறுத்தக்கோரியும் யுத்தநிறுத்தம் ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியும் வருகின்றது. இவ் வேளையில் இணைத்தலைமை நாடுகள் ஒருபக்கச் சார்பாக புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைய வேண்டும் என்று கேட்டதைக் கண்டு உலகத்தமிழ் இனம் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளது.

ஆவ்வாறே முருகதாசனும் இணைத்தலைமை நாடுகளின் இந்த அறிவிப்பு மறைமுகமாக இலங்கை அரசின் இனஅழிப்பை ஊக்குவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

என் இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த தவறிய உலகமே உங்களின் மனச்சாட்சியை தட்டியெழுப்ப என்னுடைய இன்னுயிரை வழங்குகின்றேன். என்று குறிப்பிட்டுள்ளார் இதனூடாக உலகத்தின் அலட்சியத்துக்கு தனது இன் உயிரையே விலையாக கொடுத்துள்ளார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் இன்று எல்லா இடங்களிலும் திரண்டு ஸ்ரீலங்கா அரசால் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் இன அழிப்பு யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று ஜனநாயக ரீதியாக எழுப்பி வரும் குரல் சர்வதேச சமூகத்தால் செவிசாய்க்கப்படாதது கண்டு பெரிதும் விசனம் அடைந்துள்ளார்கள். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் வெறுப்பும் கோபமும் அதிகரித்து வருகிறது.

தியாகி முருகதாசன் போன்ற தற்கொடையாளிகளின் தியாகத்தை உலகத் தமிழர்கள் மிகவும் மதிக்கின்றனர் எனினும் இத்தகைய தற்கொடைகள் நிறுத்தப் படவேண்டும் என அன்பாக கேட்டுக்கொள்கிறோம்

அதே வேளை உலகம் தமிழ் மக்களின் ஜனநாயகக் குரலுக்கு மதிப்பளித்து உடனடியாக யுத்தத்தை நிறுத்தவும் சமத்துவ அடிப்படையில் இருதரப்பும் பேச்சுவார்த்தை முலம் கௌரவமான தீர்வு காணவும் தாமதிக்காது செயற்பட வேண்டும் இதன் முலமே முருகதாஸ் போன்றவர்களின் ஆத்மா சாந்தியடையும்.

உலகத்தில் இன்னமும் தர்மம் வாழ்கின்றது என்றே உலகத்தமிழர் நம்புகின்றனர்.

**பத்மினி சிதம்பரநாதன்**
பாராளுமன்ற உறுப்பினர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

# முருகதாசனின் ஆன்மாக்கு

தியாகம் செய்து தெய்வமானாய் தமிழா
நம் உறவுக க்காய் உன் உள்ளம் எரிந்தது
அந்த தீயால் உன்னையும் எரித்தாய்
தாய் நாட்டை நேசிக்கும் குடிமகனாய் - நல்ல தமிழனாய்
வாழ்ந்து இன்னுயிர் நீர்த்தாய்
உள்ளத்து குமுறல்களால் உன் ஆன்மா துடிப்பது
தமிழர்களால் உணரமுடியும்
உன் இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது
உன்னை பெற்றெடுத்த தாய் பெருமிதம் கொள்ளவேண்டும்
இன்னும் உன்னைப்போல் ஒருவனை பெற்றெடுக்க
பல ஈழத்தாய்கள் வரம் பெறவேண்டும்
இன்றும் உன் உள்ளத்தீ அணையவில்லை
நாங்களும் ஓயப்போவதில்லை
நீ மறுபிறவி எடுக்க வேண்டும் - நமது
சுதந்திர ஈழத்தை காணவேண்டும்
ஏரிந்தது உன் உடலாயினும் - வாழ்வது
உன் லட்சியப் போராட்டம்
உன் சாவிற்கு அர்த்தம் வேண்டும் - எங்களது
உரிமைகள் மீட்கப்பட வேண்டும்
உன் தியாகத்திற்கு என்றும் - நம் தமிழீழம்
தலைவணங்கும்.

வினிதா அருணாச்சலம்
பிரித்தானிய இளையோர் சார்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகதாசனின் தியாகம் ஈடிணையற்ற இமயத்தைப்போன்றது.

முருகதாசன்... மானிடர்கள் எல்லோரும் பூமிப் பரப்பில் பிறப்பதும் பின்பு இறப்பதும் வழக்கம். ஆனால் இந்த வாழ்வோட்டத்தில் அவரவர் தான் சார்ந்த சமுகம், இனம், நாடு, மொழி என்பனவற்றிக்கு என்ன செய்தார்கள் என்பது முக்கியமான விடயம். அவ்வாறு ஒன்றுமே செய்யவில்லை என்றால் "தோன்றலில் தோன்றாமை நன்று".

இந்த இடத்தில் நாம் முருகதாசன் பற்றி சற்று நின்று நிதானித்து பார்ப்பது அவசியமாயிற்று. நான் பிறந்தேன் வாழ்ந்தேன் என்பதற்கு எல்லாம் அப்பால் தான் சார்ந்த சமுகத்திற்காக பெறுமதி மிக்க தன்னுயிரை மாய்த்து வரலாற்றில் தடம் பதித்துள்ளான் தியாகி முருகதாசன். தற்கொடையாய் தன்னுயிரை தமிழின விடுதலைக்காய் தன்மானம் காத்து தாரைவார்த்த அந்த தியாகத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை.

தமிழினம் இன அழிப்பில் அழிந்து கொண்டு செல்கின்றது என்பதை அறிந்தும் கண்டும் மனமுடைந்த நிலையில் இதைத்தடுத்து நிறுத்த தன்னால் செய்ய முடிந்தது என்ன? எதனால் இந்த இனப்படுகொலையை நிறுத்தலாம்? என்று சிந்தித்தவன் தனது உயிரையே அதற்காக கொடுக்க முன்வருகின்றான். இந்தச் செய்தி சர்வதேசத்திற்கே சொல்லப்பட வேண்டும் என்பதை உணர்ந்த அவன் ஐ.நாவுக்கு முன்னால் வைத்து எனது இனம் படும் வேதனையை என்னால் பொறுக்க முடியவில்லை. அந்த இனத்தின் விடிவுக்காக நான் எனது உயிரை கொடுப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை என கூறி சர்வதேசம் எனது இனத்தின் விடுதலைக்காக நல்ல முடிவை எடுக்க வேண்டும் எனச் சொல்லி சர்வதேசத்தின் ஊமைக் கண்களைத் திறக்க முயற்சித்துள்ளான். அந்தக் கண்கள் திறக்குமா? நீண்டு போயுள்ள அந்த மௌனம்தான் கலையுமா?

தனது தாய் தந்தை உடன் பிறப்புக்கள் உற்றார் உறவினர்கள் என அனைத்தும் அவனைச் சூழ்ந்திருந்தபோதிலும் அந்த பந்த பாசங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக தனது தாய்நாடு, தமிழினம், தேசியம், விடுதலை என்பன அவன் முன்னால் விரிந்திருந்ததால், இமயமாய் உயர்ந்திருந்ததால் அதன் மேல் கொண்டிருந்த ஆழமான நேசம் அதற்காகவே தனது உயிரைத் தியாகம் செய்ய வைத்துள்ளது.

உண்மைகள் என்றுமே சாவதில்லை. இந்தத் தியாகங்களும் அப்படித்தான்.

தியாகி முருகதாசனின் தியாகம் அனல் கொண்ட நெருப்பானது. அது என்றுமே அமிழ்ந்துவிடாது. தொடர்ந்து எரிமலையாய் எரியும். அவனின் எண்ணம் வெல்லும். அதற்காக அவன் புலம் பெயர் வாழ் மக்களைத்தான் சாட்சியாக வைத்துள்ளான். அவன் கொண்ட இலட்சியம் வெல்ல வேண்டுமானால் உலகம் கண் திறந்து பார்க்க வேண்டுமானால் இந்நாழில் அவனுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் ஒவ்வொரு மக்களின் கடமையும் முடிந்துவிட்டதாக நினைத்துவிடாமல் தொடர்ந்து போராடுங்கள். இதுதான் தியாகி முருகதாசனுக்கு நீங்கள் செலுத்தும் அஞ்சலியாகும்.

தியாகி முருகதாசனின் ஆத்மா சாந்தியடைய தமிழீழ மக்கள் சார்பாகவும் குறிப்பாக நான் சார்ந்த மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சார்பாகவும் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**எஸ்.ஜெயானந்தமூர்த்தி**
நாடாளுமன்ற உறுப்பினர்
மட்டக்களப்பு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்தமிழ் மகன் முருகதாசன்

வீரத்தமிழ் மகன் முருகதாசன் அவர்கள் தமிழீழத் தாயகத்தில் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தினால் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் இன அழிப்பு போரை தடுத்து நிறுத்தி தமிழ் மக்களை காப்பாற்ற சர்வதேச சமூகம் அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தனது உடலில் தீ மூட்டி தனது உயிரை தமிழீழ தேசத்திற்கு காணிக்கையாக்கியுள்ளார்.

சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் இன அழிப்பு யுத்தினையும் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகள் சபையும், வலிமை மிக்க சர்வதேச நாடுகளும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது மௌனமாக இருந்து இன அழிப்பிற்கு துணை போகும் செயற்பாடு கண்டு, சர்வதேச சமூகத்தின் தவறான போக்கினை அவர்களுக்கு புரியவைத்து அவர்களது மனச்சாட்சியை தட்டிவிட்டு, தமிழ் மக்களின் அவலங்களை தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்ற நோக்கில் தனது உயிரை தியாகம் செய்யும் இடமாக ஐநா சபை முன்றலை தெரிவு செய்துள்ளார் என்றே நான் கருதுகின்றேன்.

முருகதாசன் தனது தனிப்பட்ட வாழ்வில் தனது உயர்கல்வியை பூர்த்தி செய்து சகல வசதி வாய்ப்பபுக்களையும் பெற்று வாழ்ந்து கொண்டிருந்த நிலையிலும் கூட அவரது நினைவுகள் அனைத்தும் தான் பிறந்த மண்ணின் மீதும் மக்கள் மீதும் அந்த மக்களின் நிம்மதியான வாழ்வு பற்றியதாகவும் மட்டுமே இருந்துள்ளது என்பதனை அவரது உயிர்த் தியாகம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாங்கள் வாழும் நாடுகளில் பல்வேறு வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்தாலும் அனைவரதும்

நினைவுகளும் கனவுகளும் அவர்களது தாய் மண்ணும் மக்களும் விடுதலை அடைய வேண்டும் என்பதாகவே உள்ளது என்பதற்கு முருகதாசன் அவர்கள் நல்ல உதாரணமாக அமைந்துள்ளார்.

முருகதாசன் அவர்களின் உயிர்த்தியாகம் தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்திற்கு பெருமை சேர்க்கும், தமிழ் இனம் இந்த வையகத்தில் வாழும் வரை ஒவ்வோரு தமிழ் மக்களது இதயங்களிலும் முருகதாசன் வாழ்ந்து கொண்டிருப்பார்.

முருகதாசன் அவர்களின் இலட்சியத்தினை நிறைவேற்ற உழைக்க வேண்டியது ஒவ்வோரு தமிழ் மக்களதும் கடமையாகும். அவரது இலட்சியத்தினை நிறைவேற்ற புலம் பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழ் மக்களும் தங்களது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி தாங்கள் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக உழைக்க வேண்டும் எனக் கோருகின்றேன். முருகதாஸ் அவர்கள் திறமையும், துணிச்சலும் நேர்மையும், அற்பணிப்பும், அயராத உழைப்பும் கொண்ட ஒருவர் இவ்வளவு ஆற்றல் மிக்கவர்கள் தமது உயிரை இழப்பதிலும், உயிரோடு இருந்து தமது இலட்சியத்தினை நிறைவேற்ற உழைப்பது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அவசியமான ஒன்றாகும்.

இந்த வேளையில் முருகதாசன் அவர்களது பெற்றோர்களுக்கும் உடன் பிறப்புக்களுக்கும் எமது ஆழந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்வராஜா கஜேந்திரன்**
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் தேர்தல் மாவட்டம்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My name Murukathsan
Date of brath 02.12.1982

## My humble request to the International Community on behalf of Tamils.

I murukathasan an innocent Tamil civilian displaced from Srilanka,now living in United Kingdom,openly and clearly declare my last will in this statement to the International Community which failed to stop the genocide against the Tamils living in their traditional homeland(North and Eastern provinces in Srilanka) by the chauvanist Sinhala Buddhist Govt and to wake up the heart of the world community.
The world community which always have a onesided unreasonable vision,about slaves,poors and the rights of the supressed minority people living in various countries including Srilanka.
This careless,undemocratic and inhuman approach of the world community and the International organisations including UNO always help the state terrorism which always act against the minorities of the world including Srilankan Tamils.
To expose this truth,I cant find better way,except sacrificing my own precious life by burning myself before the world community.
I believe the flames over my body,heart and soul will help the world community to have a deep human look over the great sufferings of the Srilankan Tamils.
Till this moment the genocide activities against the Tamils by the Srilankan Govt is silently accepted by the International community by helping Sinhala state terrorism by providing arms,ammunition,military and intelligence needs openly and secretly which boost the morale of the Mahinda Rajapakse's regiment to continue the civil war against the Tamils in an aggressive way.
The Srilankan Govt reject all the requests of the world community and refuse frankly all type of international war and human rights laws and ordinance and continue its brutal genocide activities under the coverd name of anti terrorism activities.
The Srilankan Govt compleatly ignore all the rules and regulations regarding war including 'Geneve Declaration' cheat UNO,condemn ICRC and Amnesty International continuesly and continueing its genocidal war openly.
This is great tragic.
The international community can easily understand the situation in Vanni.Nearly Four and a half lakhs of Tamils of all ages of both sex traped within a very small area- a war zone- and have to face all kinds of difficulties.
No proper shelter.
No required food and medicine.
No way to earn for their living.
No education.
No NGO's or INGO's to help, guide and to console them.
Under air attack area,within fall of bullets,the Tamils young and old,infants and children,male and femals including pregnant ladies,patients disabled peoples suffer a lot.
How can I express in words?
I can't.
But I think the people of the world who can think resonably understand what I am try to say through my heart and soul.
Scattered pieces of the dead bodies,blood stained streets,burnt houses,continuous movements of the displaced peoples and their feared hopeless faces,the sound of passing shells,bullets,rounds and

bombs,destroyed natural sources,buildings,houses,temples and hospitals,empty shops,dangerous mud streets and lanes.
Can you able to imagine a picture of a suffering country?
This is a real scene of my homeland and life potrait of Tamils.
No mediamen allowed to visit and see the true situation of the Vanni Tamils.
Most of the medias speak on behalf of the Govt and spitting lies to create a false scene about Vanni situation.
Once again I want to say this is the most tragic situation that world community must take quick and necessary action to stop the genocide against the Tamil people and save their life.
For your kind perusal and deep consideration I am giving you the following facts.
On 26.01.2009 at Mullaitivu – Suthanthirapuram junction after World Food Programme(UN) officers after hoisting their flag started to distribute food and other things to the thousands of displaced people gathered at ground.While distributing activities continues,they have to face severe shell attack from morning till night by Srilankan security forces(SLSF). While this attack the ICRC office also undergone severe damages. That day 302 innocent Tamil civilians killed and 1199 people severely injured.On that day a lot of unidentified bodies of the Tamils were found in the surroundings of the Udayarkaddu hospital.
When I was informed about this through phone by a relative, I got great shock.
No one was there to save the injured.No one know who and who are alive and dead.
The UN and the ICRC officers who were the only witness for this tragic incident,also seek shelter in the small drench bunkers to save their life and left the premises immediatly.
Then they issued a statement about this incident.
That place was already announced as a security zone by the Srilankan Govt.This is an important point.
The Govt show no reaction to the statement,ignore it and continues its attacks more and more vigorously.
What do you think about this?
How do you name it?
I openly name it as State terrorism.
From 02.02.2009 till 04.02.2009 Puthukkudiyiruppu hospital which was decleared by the Govt as a security area and was functioning under the supervision of ICRC and UN officers targetted and attacked by Srilankan Security Forces severly while these officers were at the hospital premises,killed and injured many patients who were under treatment at that time.
There is no need of witness other than UN and ICRC officers who were present there at that time.
On 04.02.2009 the Puthukkudiyiruppu hospital was compleatly destroyed and made functionless by the Govt to celebrate their independence day in a cruel manner.
ICRC officers confirmed that there were nearly 500 patients under the treatment while Puthukkudiyiruppu Hospital was attacked by the Srilankan Airforce(SLAF) and Artillary cluster bombs.
I want to ask the International community to explain me what kind of attack it was?
Was it an attack against the terrorism?
Before this incident- on 26.01.2009 – Udayarkaddu hospital was attacked and many people killed.Regarding this incident the spokesmen of the Srilankan security forces Brigadier Udhaya Nanayakkara asked a question in an interview to the BBC,that why the people go to Udayarkaddu hospital instead of Puthukkudiyiruppu hospital and put forward a senseless reasons for their brutal bombing.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A few days before this incident,Udayarkaddu area also declared by the Govt as security zone and asked the people to move towards that area to save their life.

Didn't Mr.Nanayakkara know this Govt declaration?

While giving reasons for the attacks on the hospitals,Srilankan Defense secretary,the Presidents brother Mr.Gothabaya Rajapakse told to British 'Sky TV' in an special interview that,No hospital can exist beyond No-fire-zone,No hospital should operate outside the safety zone,everything beyond the safety is a legitimate target.

Thus he gave a foolish reason to world community.

Is the world community accept the answer of the Gothabaya Rajapakse?

Mullaitivu General hospital which was functioning earlier at Mulliavalai and then at Vallipunam,Kilinochchi hospital which was functioning at Visvamadhu and then at Udayarkaddu,Mallavi hospital which was functioning at Moonkilaru and Puthukkudiyiruppu hospital,all were attacked and compleatly destroyed by the SLAF because Govt want not to allow Tamils to get treatment to save their life.

The International community and UN organazations ask both parties to respect the International Humanitarian Laws,but they keep silence to take any strong action against Srilankan Govt who ignore all kinds of reasonable requests of the same community and organization.

This is the main cause for the present tragic situation.

Because of the chauvanistic stand of the Srilankan Govt,the Tamils are continuously supressed by the Sinhala rulers cruelly by refuse to give their political rights by implementing unacceptable laws.

After the Independance of Srilanka,the Sinhala leaders gradually and sharply planed to build up the country as a complete Buddhist Sinhala nation by suppressing the minority Tamils politically,ecconomically,culturally and educationally.

Sinhala colonization in the Tamils Homeland areas create a big problem,which leads to communal riots and civil war.

During peace talks periods to seek a reasonable political solution Sinhala leaders tried their tactics to cheat the Tamil leaders.

Speaking about peace and political solution the Sinhala leaders basically belieive in military solution and their genocide maniac policies never allow them to reach a political solution to ethnic problem.

During the last four decades Sinhala leaders continue a civil war aggresively,which now became an openly decleared war between Sinhalese and Tamils.

Under the covered name of terrorism Srilankan chauvanist leaders and Buddhist monks now running a full scale war against Tamils which has a sharp plan to destroy Tamil community from Srilanka.

That process is now continuing.

The International community silently watching everything kept closed its ears to the cries of Tamils.

The voice of the Tamil for their self determination political rites is resonable and democratically acceptable by the International community.

If so,why this community keep silence in this matter?

I can't understand the real policy of the democratic International community.

The Tamils take arms in their hands only to safe guard themselves from Srilankan armed forces.

All knew and History tells that the rights of Tamils were refused during last four hundred years of colonial rulers.When Britishers leaving our country they handed over the ruling rights to majority Sinhalese.From that day the Tamils fight for their political rights through quiet and democratic ways which was violently rejected by the Sinhala rulers.This inhuman way of approach made the Tamils to select the same way to answer the Sinhalese.

This is inevitable.

This is reasonable and acceptable.

After the world community realized that a political solution must find to end this communal problem a process was started by Norway with the help of Co-chairs a half decade ago.

It shows this is a political problem and it must be solved through a reasonable lasting political solution.

But the Srilankan Govt on its own way to seek a solution through a war.

The silence of the world community make me to think whether they are also take an anti Tamil stand?

This question makes me to take the decision of sacrificing my life by burning myself before the world community which convey a message to take a reasonable decision on this issue,and try their best immediatly to save the life of the Tamils in Srilanka.

The statement issued by the Co-chairs on 03.02.2009 highly worried the Tamils who have a deep confident on them.

The last hope of the Srilankan Tamils is also lost by this unresonable pro-Srilankan Govt statement.

Do the Co-chairs countries want to help the Srilankan chauvanists in their genocidal activities against Tamils?

I know that the Co-chairs countries were take a pro Srilankan stand during the Norway peace talks which help the Srilankan Govt to build up their armed forces and also to cheat the Tamils.

I dont know whether the Co-chairs know the situation in state controled areas of the North and East of Srilanka.Tamils live in those area live a lifeless life.Kidnapping,murders,rapes and other human rights violations continue in those areas.

Peoples live like open jail prisoners.Medias are threatened.Human rights organisations seldom expose these news.But the world community including Co-chairs keep closed their lips,and ask our people to move into the military controled areas.Can Co chairs take responsibility for the security of the people live in state controled areas?

Never they can't.

We Tamils beleive that the world community including Co-chairs who speak a lot about the Soverignity of the countries help the state terrorism,by ignoring the soverignity of the monority peoples like Tamils who fight for the resonable political rights and branded their liberation struggle as terrorism.

I am worried and ashamed about this.

We Tamils displaced and all over the world loudly raised our problems and asked for help before international community in your own language for three decades,But nothing happened.

In this situation,how can I express my feelings? I have no words to wake up a world community to have a humanitarian look over our problem and to take necessary action to save our life.

So I decided to sacrifice my life by burning myself before the International community and the UNO Headquarters.

This will tell you a bright message which reach your heart and minds and wake up your soul.

I firmly beleive that the end of my life will make the world community to change their heart and to start a new era which help to liberate Tamils in Srilanka.

I want to tell onething to the world Tamil community.

Please get together,join your hands,raise your voice together to win the rights of our people, and to win the hearts and minds of all Nationalities.

This is a great last chance.

The flames over my body will be a Torch to guide you through the liberation path.

I am too far away from you by body,but I am too near to your heart.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Never belieive the Sinhala chauvanist leaders,who never change the hearts and minds towards justice and peace.
We continuesly ask and fight for our resonable rights before the world community.
There is a Bible Saying- 'Ask it will be given to you and knock, the door will be opened.
As so-one day the world's heart,mind and the soul will wake up.
That day we liberate ourself,our homeland and enter into a new era.
With much hope and confidence......
yours,
murukathasan



12.02.2009

**உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத்மார்த்த வேண்டுகோள்**

என் இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த தவறிய உலகமே, உங்களின் மனசாட்சியை தட்டியெழுப்ப என்னுடைய இனிய உயிரை வழங்குகின்றேன்.

எனது பெயர் முருகதாசன்

பிறந்த திகதி 02.12.1982

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து london நாட்டின் முகவரியில் வசிக்கும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவன்.

இலங்கையில் வாழும் தமிழ் இனம் பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் அரசால் நசுக்கப்பட்டு வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதனை நீங்கள் எவரும் தடுத்து நிறுத்தவில்லை. பார்த்துக்கொண்டும் ஊக்கம் கொடுத்துக்கொண்டும் இருக்கின்றீர்கள்.

போர் தொடர்பான நடைமுறைகள் , ஜெனீவா பிரகடனம், அடிப்படை மனித உரிமைகள், இன அழிப்பு,அதற்கான சட்டங்கள் , நடைமுறைகள் எல்லாவற்றையும் ஐநா மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன வைத்திருக்கின்றன.தனது உறுப்பு நாடுகள் அவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றெல்லாம் சட்டம் வைத்துள்ளீர்கள்.ஆனால் இவற்றையெல்லாம் மீறி எனது தமிழ் இனத்தை ஒட்டுமொத்தமாக இலங்கைத்தீவில் ஸ்ரீலங்கா அரசு படுகொலை செய்துகொண்டிருக்கின்றது.

இன்று வன்னியில் எனது நான்கரை லட்சம் தமிழ் உறவுகள் எப்படிக் கொடூரமாக வதைக்கப்படுகின்றார்கள் என்பதை உலகின் பிரதிநிதிகளான ஐநா அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் அங்கிருந்து வெளியிடும் அறிக்கைகளில் இருந்தே தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

வன்னியில் என் இனத்தின் நான்கரை லட்சம் பேர் ஒரு குறுகிய பகுதிக்குள் முடக்கப்பட்டு ஸ்ரீலங்கா அரச படைகளால் நாள்தோறும் எறிகணைத்தாக்குதல்கள் மூலமும் வான்குண்டுத்தாக்குதல்கள் மூலமும் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான என் உறவுகளின் பிணங்கள் வீதிகள் எங்கும் கிடப்பதை அறிந்த போது எனக்கு தாங்க முடியாத துயரமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. நாள்தோறும் எமக்கு கிடைக்கும் செய்திகளில் வீதி வீதியாக கொல்லப்பட்டுக் கிடக்கும் என் இனத்துப் பாலகர்கள், பால்குடிக்குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் நோயாளர்கள், பற்றித்தான் தகவல்கள் வருகின்றன

மருத்துவமனைகள் அங்கு பாதுகாப்பானவையாக இல்லை. மருத்துவமனைகள் கூட குறிவைத்துத் தாக்கப்படுகின்றன. மருத்துவமனைகளைத் தாக்குவதை ஸ்ரீலங்கா அரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயப்படுத்துகின்றது. அவர்கள் தொடர்தாக்குதல்களை நடத்தி மக்களை கொல்கின்றார்கள். வன்னியில் பயங்கரவாதிகள் இருக்கிறார்கள்.அதனால் தாக்குவோம் என்கிறார்கள்.

உங்களின் மொழியில் கேட்கிறேன் பிறந்த குழந்தைகள் கொல்லப்படுகின்றார்கள் சிறார்கள் கொல்லப்படுகின்றார்கள் வயிற்றில் இருக்கும் சிசுக்கள் கூடக்கொல்லப்படுகின்றனர்.அவர்களும் பயங்கரவாதிகளா?

மக்களை கொல்வது பயங்கரவாதம் என்கிறீர்கள். அங்கு தமிழ் மக்கள் அரசால் நாள்தோறும் படுகொலை செய்யப்படுகிறார்கள். அவர்கள் இடம்பெயர்கின்றபோதும், இடம்பெயர்ந்து ஒரு இடத்தில் தரித்து நிற்கின்றபோதும் மருத்துவமனைகளுக்கு செல்கின்றபோதும் வீதிகளில் நடமாடுகின்ற போதும் என்று எங்கும் அவர்கள் கொல்லப்படுகின்றனர்.கொத்துக் கொத்தாக அவர்கள் படுகொலை செய்யப்பட்டு கிடக்கிறார்கள்.

முல்லைத்தீவு சுதந்திரபுரச்சந்தி திடலில் ஐநாவின் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் கொடியை ஏற்றி நிலைகொண்டு நிவாரணத்தை வழங்கிக்கொண்டிருந்த போதும் அந்த திடல் மீது 26.01.2009 அன்று பகல் இரவாக எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.அப்பகுதியில் இருந்த செஞ்சிலுவைக்குழு அலுவலகமும் தாக்கப்பட்டது.அன்று மட்டும் 302 மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.1199பேர் படுகாயமடைந்தனர். அன்று அதிகளவில் உடையார்கட்டு மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளெங்கும் பிணக்காடாக இருந்ததை எனது உறவினர் நேரில் பார்த்து தொலைபேசியில் சொல்லியபோது நான் அதிர்ந்து விட்டேன். யார் இருக்கிறார்கள், யார் மடிந்தார்கள் என்பதை அறியாமல் உயிருடன் இருந்தவர்கள் அந்த இடத்தை விட்டு ஓடினர்.அவலங்களின் சாட்சியாக நின்ற ஐநா அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளும் சிறிய பதுங்குகுழிகளுக்குள் பாதுகாப்பு தேடி இருந்துவிட்டு அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறினர்.

அன்றைய நாளை மறக்க முடியாதளவுக்கு எனக்கு பெரும் மனஅழுத்தத்தை ஏற்படுத்தியது.இதுபற்றி ஐநா பிரதிநிதிகள் செஞ்சிலுவைக்குழுப் பிரதிநிதிகள் அறிக்கை வெளியிட்டனர்.அப்பகுதி பாதுகாப்பு வலயம் என்று ஸ்ரீலங்காவால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகும்.இவ்வாறு தானே பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதில் பன்னாட்டுப் பிரதிநிதிகள் சாட்சியாக இருக்க, ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களை படுகொலை செய்து வருகிறது. நாள்தோறும் இத்தகைய தாக்குதல்கள் நடக்கின்றன. இது அரச பயங்கரவாதம் இல்லையா? அரசே நடாத்தும் இனப்படுகொலை இல்லையா?

இவ்வாறே, போரின் போது மருத்துவமனைகள் இலக்கு வைக்கப்படக் கூடாது என்ற மரபையும் புறந்தள்ளி, ஐநா அதிகாரியும் பன்னாட்டு செஞ்சிலுவைக்குழுப் பிரதிநிதியும் நின்றவேளையில் ஸ்ரீலங்கா அரசுப்படைகள் காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை வழங்கிவந்த புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது 2009.02.02 தொடக்கம் 2009.02.04 திகதி வரை குண்டுகளை வீசி நோயாளர்களை கொன்றதற்கு உங்களவர்களே சாட்சி.

4ம் திகதி ஸ்ரீலங்காவின் சுதந்திரநாள் கொண்டாட்டம். அன்றுதான் புதுக்குடியிருப்பு மருத்துவமனை முற்றாக அழித்துச் செயலிழக்கச்செய்யப்பட்ட நாளாகவும் அமைந்தது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை தொடர் விமானக் குண்டுவீச்சுகளாலும் ஆட்லறி கொத்துக்குண்டுகளாலும் தாக்கப்பட்ட போது அங்கு அப்பாவி மக்கள் 500 பேர் சிகிச்சை பெறுகின்றார்கள் என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி உறுதிப்படுத்தி தகவல் வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, இதற்கு ஒரு கிழமைக்கு முன் 26.01.2009ல் உடையார்கட்டு மருத்துவமனை தாக்கப்பட்டு மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக பிபிசி நிறுவனத்திற்குப் பேட்டியளித்த சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, புதுக்குடியிருப்பில் மருத்துவமனை இயங்கும் போது மக்கள் ஏன் உடையார்கட்டு மருத்துவமனைக்கு போக வேண்டும்? எனக் கேட்டு உடையார்கட்டு மருத்துவமனை மீதான தாக்குதலை நியாயப்படுத்திருந்தார். உடையார்கட்டு பகுதியை சில தினங்களுக்கு முன்னர்தான் பாதுகாப்பு வலயமென குறிப்பிட்டு அங்கு மக்களை ஒன்றுகூடுமாறு சிறிலங்கா அரசு அறிவித்திருந்த நிலையிலும்கூட அந்த மருத்துவமனை தாக்கப்பட்டிருந்தது. அதனை இராணுவப் பேச்சாளர் ஏற்றுக்கொண்டு நியாயப்படுத்தியுமிருந்தார்.

சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்காரா கூறிய அதே புதுக்குடியிருப்பு மருத்துவமனையே சில தினங்கள் கழித்து தாக்கப்பட்டது. 02.02.2009 தொடக்கம் 04.09.2009வரை குண்டுவீசி நோயாளர்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். ஐநா மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் குறித்த மருத்துவமனை வளாகத்தில் தங்கிநின்ற நிலையிலேயே சிறிலங்கா அரசபடைகள் மேற்படி மருத்துவமனைமீது தாக்குதலை மேற்கொண்டன.

பிரித்தானிய ஸ்கை ஒளிபரப்பு நிறுவனத்திற்கு 03.02.2009 அன்று வழங்கிய சிறப்பு நேர்காணல் ஒன்றில் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே எந்த வைத்தியசாலைகளும் இல்லை.அதனால் புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஒரு நியாயபூர்வமான இலக்கு என்று வைத்தியசாலைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நியாயப்படுத்தி சிறிலங்கா ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச கருத்துத் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகள் தாக்கப்படுவதை நியாயப்படுத்தியும் இனியும் மருத்துவமனைகள் தாக்கப்படும் என்பதை வலியுறுத்தியும் மேற்படி சிறிலங்கா அரசின் இராணுவப் பேச்சாளரும் மற்றும் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோதபாய ராஜபக்ச ஆகியோர் உத்தியோகபூர்அ வமாகவே உலக செய்திநிறுவனங்களில் கருத்துக்களை வெளியிடுகின்றனர். சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு இவ்வாறான ஒரு கருத்தை அவர்களால் கூறமுடிகின்றது என்றால், மருத்துவமனைகள் தாக்கப்படுவது உலக நாடுகள் கொடுத்துள்ள அங்கீகாரம் என்று தானே பொருள்படும்.

முள்ளியவளையில் இயங்கிய முல்லைத்தீவு பொதுமருத்துவமனை, வள்ளிபுனத்தில் இயங்கிய முல்லைத்தீவு பொதுமருத்துவமனை, விசுவமடுவில் இயங்கிய கிளிநொச்சி பொதுமருத்துவமனை,உடையார்கட்டில் இயங்கிய கிளிநொச்சி பொதுமருத்துவமனை, மூங்கிலாறில் இயங்கிய மல்லாவி மருத்துவமனை, புதுக்குடியிருப்பு மருத்துவமனை என்பன மருத்துவமனைகள் என்பதற்காகவே தாக்கப்பட்டுள்ளன

இரு தரப்புக்களையும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்கும்படி கோரும் இந்நாடுகளுக்கு, வைத்தியசாலைகளைத் தாக்குவதன் மூலம் வேண்டுமென்றே தமிழர்களை இலக்கு வைக்கும் சிறிலங்கா அரசு அதன் காரணமாக அந்தச் சட்டங்களை முழுவதுமாக மீறுகின்றது என்று நன்கு தெரியும்.

சிறிலங்கா அரசினால் முன்னெடுக்கப்படும் இந்தக் கொள்கை நிலைப்பாடு மனித இனத்திற்கு எதிரான தீங்கியல் குற்றமாகும்.இந்தக் கொள்கையை முன்னெடுக்கும் சிறிலங்கா அரசின் போக்கால் சென்ற மாதம் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படவும்,காயமடையவும் நேர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தமிழ்மக்கள் இலங்கைத் தீவில் படும் துயரத்தின்பால் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக எனது உயிரைக் கொடுக்கின்றேன். இந்த முடிவை எடுத்து நடைமுறைப்படுத்தும் இடைக்காலத்தில்கூட தினம் தினம் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இலங்கைத் தீவெங்கும் வீதி வீதியாக கொல்லப்படுகின்றார்கள் என்ற செய்திகள் வந்தவண்ணமே உள்ளது.

இந்த மனிதத் துன்பியல் கொடூரம் மனிதாபிமான உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிட்டுவதைத் தடை செய்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கையால் மேலும் தாமதமாகியுள்ளது. அனைத்துலக சமூகம் இந்த உண்மைகளை முழுமையாக அறிந்துள்ள போதிலும் பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களை பின்பற்றுமாறு சிறிலங்கா அரசிற்கு கடும் அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்து சிறிலங்கா அரசிற்கு படை மற்றும் பொருண்மிய உதவிகளை வழங்கி வருகின்றமை பெரும் துர்ப்பாக்கியமாகும்.

தமிழ் தேசம், சிங்கள தேசம் ஆகியவற்றின் வாழிடமே இலங்கைத் தீவு என்பது, தமிழ் மக்களின் உறுதியான மாற்றமுறாத கருத்து நிலைப்பாடாகும். இந்த யதார்த்தத்தை அங்கீகரிக்கும் அடிப்படையில் தான் இரு தேசங்களினதும் உண்மையான பிரதிநிதிகள் அதாவது இரண்டு தேசங்களினதும் எதிர்கால பாதுகாப்பு பரஸ்பர நலன் போன்றவற்றிற்காக எவ்வாறு இரண்டு தேசங்களும் கூடிச் செயற்பட்டு தமிழரின் தேசிய பிரச்சனைக்கு நீதியான நீடித்து நிற்கக் கூடிய தீர்வைக் காணலாம் என்பது குறித்து பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்.

இலங்கைத்தீவு முழுவதும் சிங்கள இனத்தவருக்கு உரித்தானது என்ற கொள்கை நிலைப்பாட்டினால் தான், சிங்களவர்களோடு சமத்துவமாக வாழும் ஓர் அரசியல் ஏற்பாட்டை பேச்சு மூலம் காண்பதற்கு தமிழினம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோற்றுப் போயின.சமத்துவமான தமிழ் தேசம் உள்ளது என்ற இந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கு மறுத்த இந்த பௌத்த சிங்கள இன ரீதியிலான தேசியவாதமே இனஅழிப்பு நோக்கிலான போர் வழித் தீர்விற்கு சிறிலங்கா அரசைத் தள்ளியுள்ளது.

நான்கு நூற்றாண்டுகளாக அந்தத் தீவில் தமிழ் இனத்திற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும்.பிரிட்டன் அந்தத் தீவின் பெரும்பான்மை இனமான சிங்களத்திடம் ஆட்சியை விட்டுச்சென்ற வரலாறும் தெரியும்.இந்த உரிமைகளுக்காக அறவழியில் தமிழினம் போராடியபோது அதை சிங்கள அரசு வன்முறை கொண்டு அடக்கியதனாலேயே தமிழினம் அடிக்கு அடி கொடுக்கவேண்டிய ஆயுதப்போராட்டத்துக்கு தள்ளப்பட்டது.

அதாவது, தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் படை மற்றும் பௌதீக ரீதியிலான அடக்குமுறையை எதிர்த்து நிற்பது அவசியம் என்பதும்,அதுவே ஆயுதம் தாங்கிய தமிழர்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டியது என்பதையும் உலகம் கவனிக்க வேண்டும்.

தமிழ் தேசம் என்ற உண்மை இருப்பு நிலையை தனது இனவழிப்பு செயற்பாடு மூலம் சிதைத்து அழிப்பது தான், சிறிலங்கா அரசு தொடுத்துள்ள போரின் நோக்கமாகும். இதை அங்கீகரிப்பது போல 03.02.2009 இல் நோர்வே,யப்பான்,அமெரிக்கா,ஐரோப்பிய ஒன்றியம் (அல்லது இணைத் தலைமை நாடுகள்) விடுத்த கூட்டறிக்கை அனைத்து தமிழர்களின் மனதையும் ஆழக் காயப்படுத்தியுள்ளது.

அதாவது தமிழ் மக்களது உரிமைப்போரினதும் சிங்கள இனவாதத்தினதும் அடிப்படைகளைத் தெரிந்துகொண்டுமே இணைத்தலைமை நாடுகள் சிறிலங்கா அரசிற்குச் சார்பாகவும் தமிழ்மக்கள் தமது உரிமைப்போரைக் கைவிடவேண்டும் என்றும் கூறி அறிக்கை வெளியிட்டமையும் கூட எனக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

ஒரு இனம் தனது உரிமைகளைக் கேட்பது தவறு என்று உலகம் கருதுகின்றதா? குறிப்பாக ஐநா அவ்வாறு தான் கருதுகின்றதா? உலகத்தில் ஏன் தமிழ் இனத்துக்கு மட்டும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அல்லது உரிமை மறுப்புக்கு உலகம் ஆதரவு கொடுக்கின்றது. அந்த மறுப்புக்கு ஏன் உலகம் துணைபோகின்றது? நாம் ஏன் அடிமைகளாக இருக்கவேண்டும் என உலகம் நினைக்கின்றது.

இன்று ஒரு அரசு பிரகடனப்படுத்தி ஒரு இனத்தை அழித்துக்கொண்டிருப்பது தெரிந்தும் உலகமே அதனைத் தடுக்கவில்லை. அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு விட்டு அமைதியாகி விடுகின்றன. ஆனால் அந்த அமைதியை நீங்கள் அந்த அரசின் இன அழிப்பிற்கு கொடுத்த அனுமதியாக கருதியே சிறிலங்கா அரசு இன அழிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.ஒரு இனத்தின் அழிவைத்தான் நீங்கள் வரலாற்றில் எழுதிக்கொண்டிருக்கின்றீர்கள். இனஅழிப்பைச் செய்யும் அந்த நாட்டுக்கு நீங்கள் ஏன் அழுத்தம் கொடுக்கிறீர்கள் இல்லை? இதுதான் உங்கள் நடுநிலையா?

1958 முதல் இன்று வரை தமிழினத்துக்கு உரிமைகள் வழங்கப்படுவதாக கைச்சாத்திடப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் சிறிலங்கா அரசால் பல தடவைகள் குறிப்பாக கடைசி நோர்வே போர்நிறுத்த உடன்பாடு வரை கிழித்தெறியப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும்.

கடைசியாக நடந்த பேச்சுக்களின்போது இணைத்தலைமை நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு சார்பாகவே செயற்பட்டன. இந்த பேச்சுக்காலத்தில் ஸ்ரீலங்கா படைத்தரப்பு தன் படையை பலப்படுத்தவே பயன்படுத்தியது என்பதும் தெளிவாகத்தெரிந்தது. பேச்சுக்களின் காலங்களை தமிழரை ஏமாற்றும் காலங்களாகவே ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தியது.

மக்களை சுதந்திரமாக நடமாட விடவேண்டும் என்று சொல்கின்றீர்கள். சிங்கள சிறிலங்கா அரசு எமது தமிழ் மக்களை ஆட்சிபுரிய அனுமதிக்கவேண்டுமென மறைமுகமாகச் சொல்கிறீர்கள்.

ஒருபுறம் சிறீலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எனது இன மக்கள் கடத்தப்பட்டு கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வீதிகளில் அநாதரவாகப் போடப்படுகின்றார்கள். இவற்றைச் செய்வது யார் என்று புள்ளிவிபரங்கள் எல்லாவற்றையும் மனித உரிமை நிறுவனங்கள் கண்டித்து அறிக்கை வெளியிட்டும் நீங்கள் எவருமே அவற்றைத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு மாறாக அப்பகுதிகளில் மக்கள் சுதந்திரமாக நடமாடலாம் என்கின்றீர்கள்.

ஈராக்கிற்கு அடுத்த படியாக உலகளவில் ஸ்ரீலங்காவிலேயே அதிகளவில் மக்கள் காணாமல் போகின்றனர் என்பதை உலக மனித உரிமைகள் அமைப்புக்கள் அடையாளப்படுத்தியும் நீங்கள் எவரும் அவற்றிற்கு பரிகாரம் காணாது அப்பகுதிகளினுள் மக்களை போகும்படி கூறுகிறீர்கள்.

சிங்கள சிறீலங்கா அரசின் ஆளுகையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது தமிழ்மக்கள் கடத்தப்பட்டும் காணாமற்போயும் உள்ளமை உங்களுக்குத் தெரியாதா? நூற்றுக்கணக்கில் அல்லாமல் ஆயிரக்கணக்கில் நடைபெற்றுமுடிந்த இவ்வாறு காணாமற் போவதற்கு எதிராக உலகநாடுகள் என்ன செய்தன.

இணைத்தலைமை நாடுகளின் பின்புலத்தில் நோர்வேயின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக் காலத்திற்கூட நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் இலங்கைத் தீவெங்கும் சிங்கள சிறீலங்கா அரச படைகளால் இரகசியமான முறையில் காணாமல் போகச் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராக உலகநாடுகள் எதனைச் செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையாண்மை என்ற பேரில் நடக்கும் இந்த இன அழிப்பை நீங்கள் அனுமதிக்கிறீர்கள். தமிழினத்தின் மீது இனஅழிப்பைச் செய்வது ஸ்ரீலங்கா அரசு என்றவுடன் நீங்கள் இறையாண்மை பற்றி பேசத்தொடங்குகின்றீர்கள். இறையாண்மை கொண்ட அரசின் உறவைப் பேணுவதற்காக அல்லது பாதுகாப்பதற்காக நீங்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவளிப்பதாகவே நாங்கள் எல்லோரும் கருதுகின்றோம். ஒரு இனத்தை நசுக்க அல்லது இனத்தை அழிக்க நீங்கள் எல்லோருமே ஆதரவளிக்கின்றீர்கள். தமிழர் உரிமைக்காக போராட்டம் செய்தால் வன்முறை அல்லது பயங்கரவாதம் என்றெல்லாம் சொல்லுகிறீர்கள். தமிழரை 1958ல் இருந்து ஒரு அரசு அழித்துக்கொண்டிருப்பதை வன்முறையாக நீங்கள் பார்க்கவில்லையா?தமிழினம் இந்த 'பூமியில் வாழும் இனமில்லையா? அவர்கள் உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் இல்லையா? நீங்கள் ஏன் எம்மை மட்டும் நசுக்க ஒத்துழைக்கின்றீர்கள்?

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து எமது தமிழ் மக்கள் உங்களுக்கு உங்கள் மொழியில் அறவழியில் எனது இனத்தை காப்பாற்றுமாறு குரல்களை எழுப்பினார்கள். ஆனால் எதையும் நீங்கள் காது கொடுத்து கேட்கவில்லை.மிகக் கொடூரமாக வதைக்கப்படும் என் இனத்துக்கு என்னால் இங்கிருந்து எதையும் செய்யமுடியவில்லை.குறைந்தது ஆறுதல் சொல்லக் கூட என்னால் முடியாத கையறு நிலையில் இருப்பது குறித்து நான் வெட்கப்படுகின்றேன், வேதனைப்படுகிறேன்.

இந்தச் சூழலில் புலம்பெயர் நிலையில் இருக்கும் எனக்கு அங்கு அவலப்படும் என் மக்களுக்கு செய்யக்கூடியதாக எதுவும் இல்லை. உங்களுக்கு அழுத்தமாக என் இனத்தின் சார்பில் எனது வேண்டுகோளைத் தெரிவித்து என் இனத்தை காக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காக எனது உயிரை தீயிற்குக் கொடுக்க முடிவெடுத்துள்ளேன்.

உலக நாடுகளே

குறிப்பாக, இலங்கை அரசுடன் கைகோத்துள்ள இணைத்தலைமை நாடுகளே

ஐ.நா நிறுவனமே

ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். சிங்கள அரசு எமது தமிழ்மக்களுக்கு செய்துவந்த கொடுமைகள் நீண்ட வரலாற்றைக் கொண்டது. அந்த நீண்ட துன்பியல் வரலாற்றின் நிகழ்காலப் பரிமாணமாகவே, தமிழ்மக்களின் பிரச்சனையில் உலக நாடுகளின் தலையீடும் ஏற்பட்டது. உலகநாடுகள் தலையிட்டபோது தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்குமென தமிழ்மக்கள் நம்பினார்கள். ஏன் நானும்கூட நம்பினேன். ஆனால் நிகழ்காலத்தில் நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதை உணர்கின்றோம்.

சிங்கள அரசின் கபட நாடகத்திற்கு உலக நாடுகளும் துணைபோவதை கண்டதனாலேயே இந்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனது தமிழ்மக்கள் தங்களது தாய்நாட்டில் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டும்,உலகம் பாராமுகத்துடன் இருப்பது மட்டுமல்லாமல் சிறிலங்கா அரசை ஊக்குவித்து வருவது கண்டும் மனம்வெதும்பியே உலகப் பொதுமன்றமாம் ஐ.நா முன்றலில் தீயின் சாட்சியாக என்னை அர்ப்பணிக்க முடிவெடுத்தேன்.

எனது மக்கள் நிர்க்கதியாக விடப்பட்டதற்கும் சிங்கள அரசுடன் சேர்ந்து இணைத்தலைமை நாடுகள் இன அழிப்பிற்கு துணைபோனதற்கும் சாட்சியாக ஐ.நா மன்றத்தின்முன் இந்தத் தமிழன் முருகதாசன் தீக்குளித்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

7

ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நீதி கிடைக்கச் செய்வதில் ஐ.நா வின் பங்கு எவ்வாறானது என ஆய்வு செய்யப்படும்போது ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் சார்பாக இலங்கைத் தமிழ் இளைஞன் முருகதாசன் தீக்குளித்து உயிர் கொடுத்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

சிங்கள அரசின் இன அழிப்பிற்குத் துணைபோகும் நாடுகளே ஐ.நாவே இன்னொன்றையும் புரிந்துகொள்ளுங்கள். நேற்றைய வரலாற்றின் ஏமாற்றத்தின் சோக வெளிப்பாடாக இந்தச் முருகதாசன் தீக்குளிக்கின்றான். ஆனால் இன்றைய வரலாறு கடந்தகாலமாகும். எதிர்காலத்தில் கோபம்கொள்ளும். தமிழரை அழித்தொழிக்க ஊக்குவித்து உதவிபுரிவோர் மீது எமது வருங்காலச் சந்ததி கோபம்கொள்ளும்.

உலகத்தமிழினமே உங்களுக்கு ஒன்றைக் கூறுகின்றேன். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உலகின் மனசாட்சியை விழித்தெழவைக்க உலக சமூகத்தின் மனதையும், அறிவையும் வென்றெடுக்க பாடுபடவேண்டும். எமது சுயத்தை நிலைநிறுத்தி எமது உரிமையை நாமே வென்றெடுப்பதற்கான வாய்ப்பும் இதுவே.

எனது தாயக உறவுகளே சிங்கள அரசின் போலி முகத்தைக்கண்டு ஏமாந்துவிடாதீர்கள். அதன் உண்மை முகம் கோரமானது என்பதை பல தடவை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள்.உடலால் தொலைவிலிருந்தாலும் உணர்வால் உங்களுடனேயே நானும் இருக்கின்றேன்.எம்மைக் களைப்படையச் செய்து சோர்வுற வைத்து எமது உரிமைகளை எம்மிடம் இருந்து பறித்துவிடலாம் என சிங்கள அரசு நினைக்கின்றது. சிங்கள அரசின் இந்த எண்ணத்தை சிதறடித்து உறுதியுடன் இருந்து எமது உரிமைகளை நாமே மீட்போம்.

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என்றார் யேசுபிரான். நாமும் எமது உரிமைகளைக் கேட்போம் தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருப்போம். சுதந்திரத்தின் கதவு ஒருநாள் எமக்காகத் திறக்கப்படும். எம் மக்களின் நல்வாழ்விற்கான கதவு ஒருநாள் திறக்கப்பட்டே தீரும். நாங்கள் கேட்போம். எமது உரிமைகளைக் கேட்டுக்கொண்டே இருப்போம். உலகத்திடம், உலக மனச்சான்றின் முன் தொடர்ந்து கேட்போம்.

தமிழரின் தாகம் தமிழீழதாயகம்

உண்மைக்காய் உயிர்தரும் தமிழன்

முருதாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகப் பேரொளி



07-03-2009 Saturday

Shree Kutch Leva Patel
Sport & Community Centre
West End Road
Northolt, UB5 6RE



பிரித்தானியா வாழ் தமிழீழத் தேசாபிமானிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org